## ஒன்றிய அரசின் பட்ஜெட்: கோவை, மதுரை மெட்ரோ ரயில், கல்வி நிதி உள்ளிட்ட எந்த அறிவிப்பும் இல்லை!

# தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கிறது மோடி அரசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் கோரிக்கைகள் எதுவும் பரிசீலிக்கப்படவே இல்லை!

**சென்னை, பிப்.3-**

**ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்கள், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை, கல்வி நிதி உள்ளிட்ட எந்தத் திட்டங்களையும் அறிவிக்காமல் தமிழ்நாட்டை மோடி அரசு தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. மேலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வைத்த கோரிக்கைகள் எதுவும் பரிசீலிக்கப்படவே இல்லை.**

**இதுகுறித்த விவரம் வருமாறு:-**

மக்களவையில், ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று முன்தினம் நிதிநிலை அறிக்கை தாக்கல்செய்த நிலையில், மதுரை, கோவை மெட்ரோ ரயில் உள்பட தமிழ்நாட்டுக்கு எதிர்ப்பார்க்கப்பட்ட திட்டங்கள் அறிவிக்கப்படாதது ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒன்றிய நிதி நிலை அறிக்கையில், நிறுத்தி வைக்கப்பட்ட தமிழ்நாட்டுக்கான கல்வி நிதி ரூ.3 ஆயிரத்து 548 கோடி விடுவிப்பு, மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு அனுமதி, ஒன்றிய அரசின் வரி வருவாயில் மாநிலங்களுக்கு ரூ.50 சதவீத நிதிப் பகிர்வு, ஜல் ஜீவன் திட்டத்துக்கான நிதி ரூ.3 ஆயிரத்து 112 கோடி விடுவிப்பு உள்ளிட்ட அறிவிப்புகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நிறுத்தி வைக்கப்பட்ட தமிழ்நாட்டுக்கான கல்வி நிதி குறித்த அறிவிப்பு பட்ஜெட்டில் இடம்பெறவில்லை.

இதேபோல, தமிழ்நாட்டுக்கு எந்த புதிய ரயில்வே திட்டமும் அறிவிக்கப்படவில்லை. கோவை, மதுரை நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டத்திற்கான அறிவிப்பும் இடம்பெறவில்லை.



மேலும், சென்னை மெட்ரோ 2ம் கட்ட திட்டத்திற்கு நிதி அறிவிக்கப்படவில்லை. தேர்தலை மனதில் வைத்தாவது தமிழ்நாட்டுக்கு திட்டங்கள் அறிவிக்கப்படுமா என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பியிருந்த நிலையில், தமிழ்நாட்டுக்கு புதிய அறிவிப்புகள் இல்லாதது பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படவுள்ளதையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**Union Budget 2026: வழக்கமாகச் சொல்லும் திருக்குறளோடு சேர்த்து, தேர்தலை மனதில் வைத்தேனும் தமிழ்நாட்டுக்கான பின்வரும் அறிவிப்புகள் இடம்பெறுமா?**

- **விடுவிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மாணவர்களின் படிப்புக்கான 3,548 கோடி ரூபாய் கல்வி நிதி**
- **கோவை, மதுரை மெட்ரோ இரயில்,**
- **தமிழ்நாடு சிறப்பாகச் செயல்படுத்தி வரும் ஜல் ஜீவன் திட்டத்துக்கான 3,112 கோடி ரூபாய் நிதி,**
- **புதிய இரயில்வே திட்டங்கள்,**
- **நிதி ஆணையம் பரிந்துரைத்தபடி ஒன்றிய அரசின் வரி வருவாயில் மாநிலங்களுக்கு 50% நிதிப் பகிர்வு.**

**இன்னும் பட்டியல் இருக்கிறது. தேர்தலை மனதில் வைத்தாவது இம்முறை தமிழ்நாட்டுக்கான அறிவிப்புகளைத் தவறாமல் வெளியிடுவீர்கள் என எதிர்பார்க்கிறோம். அவை மதுரை எய்ம்ஸ் போல அறிவிப்போடு நின்றுபோகாமல், முறையான நிதி ஒதுக்கீட்டுடன் குறித்த காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் கோருகிறோம்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

### விடுதலைப் போராட்டத்தில் முழு மூச்சாக ஈடுபட்ட


# ஐயா ஓமந்தூர் ராமசாமி தலைசிறந்த காந்தியவாதி!

## பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, பிப். 3-**

**“விடுதலைப் போராட்டத்தில் முழு மூச்சாக ஈடுபட்ட ஐயா ஓமந்தூர் ராமசாமி அவர்கள் தலைசிறந்த காந்தியவாதி” என்று அவரது பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தியில் புகழாரம் சூட்டியுள்ளார்.**

விடுதலைப் போராட்ட வீரரும் முன்னாள் முதலமைச்சருமான ஓமந்தூராருக்குத் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என அறிவித்து தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-



எளிமையின் உருவம் - விடுதலைப் போராட்ட வீரர் - முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூராருக்குத் திருவுருவச் சிலை, உப்புச் சத்தியாகிரகம், சட்டமறுப்பு இயக்கம், தனிநபர் சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு என இந்திய விடுதலைப் போராட்டத்தில் முழு மூச்சாக ஈடுபட்ட தலைசிறந்த காந்தியவாதியும், இந்தியா விடுதலையடைந்தபோது நம் மாநில முதலமைச்சராக இருந்த பெருமைக்குரியவருமான ஓமந்தூர் ராமசாமி ஐயா அவர்களின் பிறந்தநாள்.

சமூகநீதிச் சாதனை யாளராகத் தந்தை பெரியாராலும் பேரறிஞர் அண்ணாவாலும் போற்றப்பட்ட அவருக்கு சென்னை ஓமந்தூ ரார் மருத்துவக் கல்வி வளாகத்தில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என அறிவிப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

### நீலகிரி மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா 57வது நினைவுநாள்!

## கழகத்தினருக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ வேண்டுகோள்!

*நீலகிரி, பிப்.3-*

அறிவுலக மேதை, திராவிட இயக்க ஆசான், தி.மு.கழக நிறுவனர், பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவுநாள் பிப்ரவரி 3ம் தேதி அனுசரிக்கப்படுகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் வழிநின்று அண்ணாவின் கொள்கை கோட்பாடுகளை கடைப்பிடித்து, திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பேரியக்கத்தையும் அதன் தொண்டர்களையும், வழிநடத்தியவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

தலைவர் கலைஞர் அவர்கள் வழிநின்று செயல்படும் கழகத் தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்களின் அறிவுரைப்படி பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவுநாளை ஒவ்வொரு கழக தொண்டனும் அனுசரித்திட வேண்டும்.

அதன்படி நீலகிரியில் இன்று (03.02.2026- செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் மாவட்ட கழக அலுவலகம் உதகை கலைஞர் அறிவாலய முகப்பிலுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தியும், தொடர்ந்து 12 மணியளவில் குன்னூர் லாலி லாலி கார்னர்



முதல் மவுன ஊர்வலமாக வந்து குன்னூர் பேருந்து நிலையம் அருகிலுள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தவும் உள்ளனர்.

கொணவாக்கரை, பெங்காம் ஆகிய பகுதிகளிலுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்தும், மற்ற இடங்களில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படங்களுக்கு மாலை அணிவித்தும், அனைத்து கழக தோழர்களும் அஞ்சலி செலுத்திட வேண்டும்.

இதற்கான ஏற்பாடுகளை தொடர்புடைய நகர, ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள் சிறப்புடன் செய்திட அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணா வழியில் அயராது உழைப்போம்..!

மாநிலத்தில் சுயாட்சி.!

மத்தியில் கூட்டாட்சி.!!

நன்றி

இவ்வாறு மாவட்டக் கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ தெரிவித்துள்ளார்.

---

### கழக கொள்கை பரப்புச் செயலாளர் முனைவர்.சபாபதி மோகன் சிறப்புரையாற்றுகிறார்!


# தருமபுரி மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் “தமிழ்நாடு தலைகுனியாது” பரப்புரை பொதுக்கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் - முனைவர்.பெ.பழனியப்பன் அறிக்கை!

*தருமபுரி, பிப்.3-*

தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் பெ.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படியும், தருமபுரி மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் “தமிழ்நாடு தலைகுனியாது!” என்ற முன்னெடுப்பில் மாவட்ட கழக செயலாளர் முனைவர் பெ.பழனியப்பன் தலைமையில் காலை 9.00 மணியளவில் காரிமங்கலம் மேற்கு ஒன்றியம், மல்லுப்பட்டி ஊராட்சி, ஒன்றிய கழக செயலாளர், M.V.T. கோபால் ஏற்பாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு நாளை முன்னிட்டு அவரது முழு திருவுருவச் சிலைக்கு மாலை



அணிவித்தல்,

காலை 9.30 மணியளவில் பாலக்கோடு பேரூராட்சி, P.S.S.சையத் இப்ராஹீம், முன்னாள் ஒன்றிய செயலாளர், கருப்பண். மாரியப்பகவுண்டர், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் ஆகியோர் நினைவிடத்தில் மரியாதை செலுத்துதல்,

காலை 10.30 மணியளவில் காரிமங்கலம் கிழக்கு ஒன்றியம், ஒன்றிய கழக பொறுப்பாளர் G.V.K.சரவணன் அவர்களின் முன்னிலையில் பெரியாம்பட்டி, சமத்துவபுரம் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தல், காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி P.M.இராஜம்மாள் குப்புசாமி திருமண மண்டபத்தில், முக்கிய பிரமுகர்கள், இளைஞர்கள், மாணவர்கள், தன்னார்வ அமைப்புகள், தொழிற் சங்கங்கள், தொழில் முனைவோர், கல்வியாளர்கள் ஆகியோர் சந்திப்பும்,

மதியம் 1.15 மணியளவில் கழக மூத்த முன்னோடிகளை சந்தித்தல், காரிமங்கலம் கிழக்கு ஒன்றியம், பைசுஅள்ளி ஊராட்சி, மாட்லாம் பட்டி கிராமம், M.C.சின்னராஜ், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர், M.C.சின்னையன், கிளை கழக செயலாளர் அவர்களுக்கு மரியாதை நிமத்தமாக நேரில் சந்தித்து அவரது இல்லத்தில் மதிய உணவு உண்ணுதல் நிகழ்ச்சியும் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து 03.02.2026 செவ்வாய்க் கிழமை மாலை 5.00 மணியளவில் மொரப்பூர் ரோடு, காரிமங்கலம் பேரூராட்சியில், மீண்டும் வா தலைவனே... வென்று வா ஸ்டாலினே, தமிழ்நாடு தலைகுனியாது! என்ற தலைப்பில் பரப்புரை பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் முனைவர் சபாபதிமோகன் சிறப்புரையாற்றுகிறார்.

அதுசமயம், நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட, ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்கள் (BDA), வாக்குச்சாவடி நிலை குழு உறுப்பினர்கள் (BLC), கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக தொண்டர்கள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு வீர வணக்கம் செலுத்த கேட்டுக்கொள்கிறேன்.


இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. மாசிலாமணி

**பிப்ரவரி 3 (2015)**



**சென்னை தெற்கு மாவட்டம், சைதாப்பேட்டை பகுதியில், வட்டக் கழகச் செயலாளராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.**

**தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பொதுச்செயலாளராகவும் – சைதை கிழக்கு பகுதியின் அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**